சிவமயம்

gistered as a News
paperin Ceylon
P. M. G. NO. H. A
69/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹு தை மீ ககஉ (1947 ஜனவரி 24 வெள்ளிக்கிழமை) [இல அ0

# பட்டினத் தெருக்கள்

## இவ்வாண்டில் திருத்தப்படா!

யாழ்ப்பாணம் நகர சங்கத்தின் பண நிலைமை இப்போது திருப்திகரமாகவில்லை. இப்படியான நிலைமையில் அடுத்தஆண்டுடன் 'முனிசிப்பல்' சபை அமுலுக்குவர இன்னும்நிலைமைமோசமாகலாம் என்று நகரசங்கத் தலைவர் சென்றவாரம்நிகழ்ந்த யாழ்ப்பாணம் நகரசங்கக் கூட்டத்தில் அறிவித்தார்.

புதிய ஆண்டில் 47,771 ரூபா மிச்சத்துடன் நாம் பரிபாலனத்தை நடத்தத் தொடங்கினாலும், வருட முடிவில் பெருத்தநட்டம் ஏற்படும் என்று ஸ்ரீ பொன்னம்பலம் கருதுகிறார். அவர் மேலும் கூறுவதாவது:

"இப்போது நகரசங்கம் மேலதிகமாக 75,000 ரூபா அரசாங்கத்திடம் பெற்றிருக்கிறது. இன்னும் 35,000 ரூபா மாத்திரமே அரசாங்கத்திடம் இருந்து உதவிப் பணமாகப் பெற முடியும்.

"தமரஷ் வரியிலிருந்து வருமானம் கிடைக்கலாம். ஆனால் இந்த வருமானம், சங்கத்துக்கு ஏற்படவிருக்கும் 40,000 ரூபாக் குறைவைச் சமாளிக்கப் போதியதாகாது.

"இப்போது இந்த நகரத்துத் தெருக்கள் நல்ல முறையில் வைக்கப்படவில்லை என்று பலவிதமான குறைகள் சொல்லப்படுகிறது. ஆனால் நாம் சென்ற ஆண்டில் 56,815 ரூபா தெருக்கள் செப்பனிடுவதற்குச் செலவழித்திருக்கிறோம். இப்படிப் பெருந் தொகையான பணத்தை நாம் முன்னொருபோதும் செலவழித்ததில்லை.

"1947-ம் ஆண்டுக்கு, தெருக்கள் செப்பனிட நகரசங்கம் பணம் செலவழிக்கப்போவதில்லை, இப்போதுள்ள பணநிலையில் தெருக்கள் திருத்தவோ வேறேதும் புதுவேலைகள் ஆற்றவோ முடியாது."

குறித்த கூட்டத்தில் மிஸ்ரர் ஜே பற்றிக் என்பவர் நகரசங்கத்தின் உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

## தேயிலை விலை அதிகரிப்பு

### இருத்தல் 4 ரூ. வரை விற்கிறது

கடந்த நாலுவருஷ காலமாகத் தேயிலைமீது இருந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் இப்போது தவிர்க்கப்படலாயிற்று. இப்போது தேயிலை பகிரங்க ஏலத்தில் விற்கப்படுகிறது. சென்ற திங்கட்கிழமை கொழும்பில் நிகழ்ந்த பகிரங்க ஏல விற்பனையில், பல இந்திய வர்த்தகர் சமூகமளித்து அதிக விலைகொடுத்துத் தேயிலையை வாங்கினர். இவர்கள் வாங்கிய தேயிலை அநேகமாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்படு மென்று தெரிகிறது.

மிகவும் திறமான தேயிலை முந்தி இருத்தல் ஒன்று 1 ரூபா 75 சதமாகவே விற்கப்பட்டது. ஆனால் சென்ற திங்கட்கிழமை நிகழ்ந்த பகிரங்க ஏலத்தில் 4 ரூபாவரைக்கும் போனது. இப்படியாகத் தேயிலை முன் எப்போதாவது விற்கப்படவில்லை.

இப்படித் தேயிலை விற்கப்படுவதால் இப்போது முன்போல ஓர் கட்டுப்பாடான விலைக்கு அதனைப் பெறுதல் முடியாததாகவிருக்கிறது. கேவலம் தூள் தேயிலை இருத்தல் ஒன்று இப்போது இரண்டரை ரூபாவாக விற்கப்படுகிறது.

இந்த நிலையில் ஊரவர்கள் கஷ்டப்படுவதைத் தவிர்ப்பதற்காக தேயிலைப் பகுதி அதிகாரி, தமது பரிபாலனத்தின்கீழ் உள்ள நிலையம் மூலமாக சங்கக் கடைகளுக்கும், பெரிய வியாபாரிகளுக்கும் தேயிலை வழங்க நிச்சயித்திருக்கிறார். திறம்தேயிலை 3 ரூபா; மத்திய வகுப்பு ரூபா 2-25. தூள் 1-75 ஆக விற்க அவர் ஒழுங்கு செய்துள்ளார்.

# ஆசிய சுதந்திரம்!

## புத்தி வந்ததா?

### வங்காளத்தில் வகுப்புக் கலகம்

வங்காளத்தில் நடந்த படுகொலைகளுக்கும், ஹிந்து - முஸ்லிம் துவேஷத்துக்கும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்தான் பொறுப்பாளி என்று வங்காள மாகாண முஸ்லிம்லீக் காரியதரிசி ஐ, அப்துல் ஹஷீம் என்பவர் ஒரு செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

வங்காளத்திலும் இன்னும் இதர இடங்களிலும் நடந்த ஹிந்து - முஸ்லிம் கொலைகளுக்கு பிரிட்டிஷ ஏகாதிபத்தியந்தான் (நூற்றுக்குநூறு பூராவாக காரணம் எனக் கருதுகிறேன் என்கிறார் ஐ. ஹஷீம்.

அவர் மேலும் சொல்லுவதாவது: பிரிட்டிஷார் இந்தியாவை விட்டால், ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையேயுள்ள துவேஷம் காற்றில் பறந்து போய்விடும். மந்திரி சபைத் திட்டம் விதை விதைத்திருக்கிறது, அதன் பிறகு செய்த பிரசங்கங்களும் செய்கைகளும் இந்த தேசத்தில் நடந்த கொடூரங்களுக்கு நேரிடையாகப் பொறுப்புள்ளவை.

இத்துடன் வைசிராய், இந்தியா மந்திரி, பிரிட்டிஷ் பிரதமர் இவர்கள் செய்த பிரசங்கங்கள், பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிடத் தயாராயிருந்த ஐக்கியத்தைக் குலைத்து விட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

அவர் லீக் கொள்கையைப் பற்றி தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கையில் ஐ. ஜின்னாவைப் பின்பற்றுவதாகச் சொன்னார்:

## இந்தோ-சீனத்து யுத்தம்

இந்தோசீனத்தில் உள்ள சுதந்திர அரசாங்கத்துக்கும், அதனை நசுக்கி மீண்டும் சர்வாதிகாரம் நிலைநாட்டக் கங்கணம் கட்டியுள்ள பிரான்சிய அதிகாரவர்க்கத்துக்குமிடையே நடக்கும் யுத்தம் இன்னும் ஒழிந்தபாடில்லை.

பிரான்ஸ் அரசாங்கம் இந்தோசீனச் சுதந்திர அரசாங்கத்தை நசுக்கப் பல்லாயிரக்கணக்கான படைகளை இந்தோசீனாவுக்கு அனுப்பியுள்ளது. இந்தப் படைகளில், பல ஜெர்மனியர் இருக்கிறார்கள். இந்த ஜெர்மனியர் ஹிட்லரின் சேனையில் இருந்து சிறையாக்கப்பட்டவர்களாகும்.

இந்தோச்சீன மக்களை நசுக்கவேண்டுமென்றால் குறைந்தபட்சம் 5 லட்சம் படைகளை உடனே பிரான்ஸ் அனுப்ப வேண்டும்; அப்படிச் செய்வதற்கு அதனால் முடியாது. அப்படிச்செய்யப் பிரான்சுக்குப் பொருளாதார நிலைமை சரியாக இல்லை. இந்த யுத்தத்தினால் பிரான்ஸ் சீரழிய நேரிடும் என்று ஓர் பிரான்சியச் சேனாதிபதி கருதுகிறார்

இது இவ்வாறாக, இந்தோச்சீன மக்களின் சுதந்திரப்போரில் ஆள் உதவி பொருள் உதவி செய்யப் பண்டிதர்நேரு முதலாம் இந்தியத் தேசாபிமானிகளும் முன் வந்திருக்கின்றனர் என்று ஓர் செய்தி கூறுகிறது. இந்தோசீனத்திற்குப் போர் வீரராகப் போய் பிரான்சியருடன் பொருதப் பல்லாயிரக்கணக்கான இந்திய வாலிபர்கள் முன்வந்திருக்கிறார்கள். பர்மாவிலும் இப்படியே பல வாலிபர்கள் முன் வந்திருக்கிறார்கள். இதற்கான ஏற்பாடுகள் யாவற்றையும் ஸ்ரீஜுத் சரத் சந்திரபோஸ் துரிதமாகச் செய்து வருகிறார்.

### பிரபல சினிமா நடிகர் மரணம்

பிரபல ஹிந்தி சினிமா நடிகரான சைகால் சென்றவாரம் ஜலந்தரில் தேகவியோகமாயினர் என்று ஓர் செய்தி கூறுகிறது.

## ஜின்னாவின் சாயம் வெளுக்கிறது

ஜின்னா சாஹேப் சமீபத்தில் வைசிராய் வேவல் பிரபுவுடன் இங்கிலாந்து சென்றபோது வழியில் கெய்ரோவில் தங்கினார். அந்தச் சமயத்தில் அராபியர்கள் இந்தியாவில் நடக்கும் ஆசியர்கள் மகாநாட்டில் கலந்து கொள்ளக்கூடாதென்று எச்சரித்தார். ஆனால் அவர்சொல்லை யாரும் ஏற்கவில்லை காபூல் அப்கானிய கழகம், டமஸ்கஸ் அராபிய அகடமி, ஜெரூசலம் ஹெப்ரூ சர்வகலாசாலை, கெய்ரோ பௌட் சர்வகலாசாலை, கெய்ரோ அழார் சர்வகலாசாலை, அராபிய கலாசார கமிட்டி இவைகளுக்கு அழைப்புக்கள் அனுப்பப்பட்டிருந்தன. அவைகளில் அநேகம் இந்த மகாநாட்டுக்கு வரச் சம்மதித்துள்ளன.

# சைவ சமயம்

[காரைநகர் மணிவாசக சபையின் எட்டாவது ஆண்டு நிறைவு விழாவின் சார்பாக, அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் எழுதிய இக்கட்டுரை, 28-12-46ல் நடைபெற்ற ஷை விழாவின்போது வாசிக்கப்பட்டது

"மேன்மைகொள்சைவம்" "சைவ சமயமே சமயம்" "சைவத்தின்மேற் சமயம் வேறில்லை" "பழைய வைதிக சைவம்" என்று ஆன்றோர்களாற் புகழப்பட்டது நமது சமயம். மிக மேலாகிய சைவசமயத்திற் பிறந்த ஒவ்வொருவரும் அச்சமயம் இப்படிப்பட்டது; அச்சமயக் கடவுள் இப்படிப்பட்டவர்; அவரை வழிபடும் முறை இப்படிப்பட்டது; சைவ முதனூல்கள் இவை; அவற்றைச் சார்ந்த நூல்கள் இவை என்றின்னோரன்ன விஷயங்களை ஆராய்ந்து அறிந்து கொள்ளுதல் வேண்டும். சமயக்கொள்கைகளைப் புறக்கணித்துத் தாம்விரும்பிய விரும்பியபடிநடப்பது துன்பத்துக்கே காரணமாகும்.

பிறந்திறந் துழலுபவர்கள் பசுக்கள். [illegible] தேவர்கள்முதற் கிருமியீறாக சீவர்களே அப்பசுக்கள். பிறந்திறந்துழலுதல் இல்லாதவர்பதி. பதி சிவபெருமான் ஒருவரே. பதியாகிய சிவபெருமானுக்குப் பசுக்களெல்லாம் அடிமைகளே யாவர். சிவபெருமானே அப்பசுக்களை ஆளுந் தலைவராவர். இதனை விசுவசித்தொழுகுஞ் சமயமே சைவசமயமாம்

சிவபெருமான் ஒருவரே பரம்பொருள். அநேகரைப் பரம்பொருளெனக் கொள்வது சைவ சமயக் கொள்கையாகாது. சிவபெருமானுக்கு உயர்ந்தவர் உண்டென்பதும் அவருக்குச் சமத்துவம் உடையவர் உண்டென்பதும் சிவத்துரோகமாம். சிவபெருமான் ஒருவரே தியானிக்கற்பாலர் [illegible] உபநிடதம்.

"எம்பெருமானைத் - தெய்வமாப்
பேணுதார் தெளிவுடைமை
தேறுமே"
"மற்றாருந் தன்னொப்பா
ரில்லாதானை"

என்றற்றொடக்கத்தனவாகிய திருமுறைப் பிரமாணங்களும் இதனை வலியுறுத்தும் சிலர் சமரசம் என்னுஞ் சொல்லைக்கொண்டு எம்மதமுஞ் சம்மதமென்கிற கொள்கையைப் பரப்புகிறார்கள். எல்லா மதங்களையுஞ் சமமாகக் கொள்ளுதல் என்பதே அச்சொல்லுக்கு அவர்கள் கொண்டகருத்து. சமரசம் என்பது தாயுமான சுவாமிகளாற் பல இடங்களிற் பிரயோகிக்கப்பட்டுள்ளது. சுவாமிகள் வேதாந்த சித்தாந்தத்துக்குச் சமரசங் கூறவந்தாரேயன்றி எல்லா மதமுஞ் சம்மதமென்று கூறவில்லை.

இந்நாட்டிலே சமயங்கள் பலவாம். ஒரு மதத்துக்கும் வேறொரு மதத்துக்கு முரிய வேற்றுமைகள் அநேகமுண்டு. அவ்வேற்றுமைகள் அவற்றுக்குரிய ஒற்றுமையைக் காட்டிலும் மிகுந்திருக்கும். ஒற்றுமை

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஞூ
தை மீ ககஉ வெள்ளிக்கிழமை

## முதலாளிமாரும் தொழிலாளிகளும்
### III

இங்கே நாம் எடுத்துக் காட்டுபவர்கள், முன்னர் எடுத்துக் காட்டப்பட்ட முதலாளிமார் தொழிலாளரென்ற பகுப்புள் அடங்கியிராதவர்களெனினும், இவர்கள் நிலையும் காலகதியில் முதலாளிமார் தொழிலாளரென்ற நிலைக்கு இறங்குதலாயிற்றெனலாம். இவர்கள் யாரென்னில், இந்நாட்டிலேயுள்ள ஆங்கில தமிழ் சிங்களப் பாடசாலைகளிற் கல்வி பயிற்றும் ஆசிரியர்களெனப்படும் உபாத்தியாயர்களாவர்; இந்த ஆசிரியர்களுக்குத் தமிழ்நாட்டிலே அக்காலத்திலிருந்த மதிப்புக்கும் பெருமைக்கும் திறமைக்கும் ஒரு எல்லையில்லையெனலாம். வணங்கா முடி மன்னரும் தமககுக் கல்வியூட்டுதலாகிய ஞானச்சுடரை ஏற்றிய தம் ஆசிரியர் வரவைக் கண்ட மாத்திரத்தை அரியணை விடுத்து எழுந்தோடி எதிர்கொண்டு பணிந்து அவருடைய ஆசிபெற்று அழைத்துக் கொடுவந்து இன்சொற்கூறி ஆசனமுதவி அதில் இருக்கச்செய்து, பின் அந்த ஆசிரியர் சொற்படி தம் அரியணையில் இருந்தனரென்று எங்கள் புராணேதிகாசங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. இதனாற்றான் "எழுத்தறிவித்தவன் இறைவனுவன்" என்றும்,

"மன்னனும் மாசறக் கற்றோ
னுஞ் சீர்தூக்கின், மன்னனிற
கற்றோன் சிறப்புடையன்.."

என்றும் பெரியார் வாக்கியங்களும் பிறந்துள்ளன; ஆனாலும் அக்காலத்து ஆசிரியர்களுக் கிருந்த மதிப்பும் பெருமையும் சுவாதீனமும் இன்னபிறவும் இக்காலத்து ஆசிரியர்களுக்கு இல்லையென்பது நிசம். ஏன்? இக்காலத்து உபாத்தியாயர்கள் பொருளுக்கு ஆசைப்பட்டுத் தங்கள் கல்வியறிவையும், கௌரவத்தையும், சுவாதீனத்தையும், நேரத்தையும், தங்களிடத்துள்ள அருமைபெருமைகளையும்உள்ளவாறு உணரும் ஆற்றலற்ற பிறருக்கு விற்று விட்டார்கள்.

நாம் முன்னர் எடுத்துக்காட்டிய தொழிலாளிகளுக்கு முதலாளிமார்களாக வுள்ளவர்கள் ஒரே குழுவினராவர்; ஆனல் இந்த உபாத்தியாயர்களுக் கெனிலோ இரண்டு மூன்று இனமான முதலாளிமார் உளரெனலாம். இக்கால முறைப்படி வித்தியாபகுதி மந்திரி, வித்தியாதிகாரி, உபஅதிகாரி, தலைமைவித்தியாதரிசி, ஏனைய வித்தியாதரிசிகள், குறித்த வயசுட் படிக்க வேண்டுமென்ற கட்டுப்பாடுடைய பிள்ளைகள் கிரமமாகப் பள்ளிக்கூடத்திற்குப் போகிறார்களோ என்பதை இடையிடையே பள்ளிக்கூடங்கள் தோறும் போய்ப் பார்க்கும் கிரமப்பரிசோதனை யுத்தியோகத்தர் முதலிய இவர்கள் உபாத்தியாயர்களுக்கு ஒரு குழுவினராகிய முதலாளிமாரென வைத்தெண்ணப்படலாம்; வித்தியாதாபனத்திலேயிருக்கும் பிரதம லேககரிடத்திலும் சில சமயங்களில் உபாத்தியாயர்களுடைய க்ஷேமலாபங்கள் தங்கியிருக்கின்றனவென அனுபவப்பட்ட ஆசிரியர் சொல்லக் கேட்டுள்ளேம். இயன்றவரையில் இவர்களை யெல்லாம் திருப்திப்படுத்தி ஊடாடவேண்டிய கடமை உபாத்தியாயர்களைப் பெரும்பான்மையும் பொறுத்துள்ளது.

மேலே சொல்லப்பட்ட வித்தியாபகுதி யதிகாரிகளொருபுறமாக, இவ்வுபாத்தியாயர்களுக்குத் தாம் தாம் படிப்பித்தற்குரிய இடங்களாயுள்ள வித்தியாசாலைகள் கல்லூரிகளின் அதிபர்களும் முதலாளிமார்கள் போலவே கருமமாற்றுகின்றனரெனல் மிகையாகாது. இலங்கையிலுள்ள கலாசாலைகளுட்பல அதிகார சங்கத்தினராலும் சில தனியதிபர்களாலும், சிலவினுஞ் சில அரசினராலும் பரிபாலிக்கப்பட்டு வரலாயின; அரசினராற் பரிபாலிக்கப்படுங் கலாசாலைகளுக்கு அதிபர்களாயுரியோர் வித்தியாபகுதியாராதலின், அவர்கள் விஷயமாக எடுத்துக் காட்டவேண்டியவை மேலே யெடுத்துக் காட்டப்பட்டுள்ளன. வித்தியாசாலை அதிகார சங்கத்தவர்களுட் சில சங்கத்தினரும், தனி யதிபர்களுட் சிலரினுஞ் சிலருந் தவிர,ஏனைய சங்கத்தினரும் தனியதிபர்களாயுள்ளார்களும், சமயம் வாய்த்தால், தம் பரிபாலனத்திலுள்ள வித்தியாசாலை உபாத்தியாயர்கள்மீது யதேச்சாஅதிகாரம்புரியத் தலைப்பட்டுக் கொண்டனரெனலாம்; வித்தியாசாலையின் அகப்பரிபாலனம் தலைமையாசிரியரையும் அவருக்கு உதவியாயுள்ள ஆசிரியர்களையும் பொறுத்ததாக விருப்பவும், வித்தியாசாலையதிபர்களாயுள்ள சிலர், உத்தரவின்றி அடுக்களையுட் புகுவார்போல், வித்தியாசாலை அகப்பரிபாலனத்திலுந் தம்தலையைப் புகுத்திக்கொண்டு அங்குள்ள ஆசிரியர்களுக்கும் மாணக்கருக்கும் தமக்கும் பேரிடர் விளைக்கின்றனர்; இதற்குக் காரணம் அதிகார வெறியும்,தம் கடமையும் கடமையினெல்லையுமறியாமையே யென்றுதான் சொல்லவேண்டும்; இந்தச் சந்தர்ப்பத்திலேதான் அறியாமை அறிவை அடக்கியாளத் தலைப்படுகின்றது; ஆனல் மிஷனரிமார் வைத்து நடாத்தும் பள்ளிக்கூடத்திலே அதிபர் வர்க்கத்தினர்க்கும் ஆசிரியர் வர்க்கத்தினர்க்குமிடையே பிணக்குநேர்தல் அரிதென, அனுபவப்பட்டோர் சொல்லக் கேட்டுள்ளேம்; எந்தக் கலாசாலையிலாக இவ்விதம் அதிபர் வர்க்கத்தினர்க்கும் ஆசிரியர் வர்க்கத்தினர்க்கு மிடையே அளவிற்கு விஞ்சிய அதிகாரங் காரணமாகப் பிணக்கு நேருமாயின், அது அவ்வக்கலாசாலைகட்கே காலகதியிற் பங்கமாக நேருமென்பதை அதிபர் வர்க்கத்தினர் ஆசிரியர் வர்க்கத்தினரென்னு மிருபாலாரும் அகத்துள்வைத்துக்கொண்டு,மேலான நோக்கத்தோடும் பெருந்தன்மையோடுங் கருமமாற்றுதல் வேண்டும்.

இதுகாறும் பலதிறப்பட்ட முதலாளிமாருக்கும் தொழிலாளர்கட்கு மிடையேயுள்ள தொடர்பையும் பேதங்களையும் எடுத்துச் சொன்னேம்; உலகம் இனிது நடைபெறும் பொருட்டு இறைவனே இருபகுதிமக்களையும் ஆக்குகின்றானென்பது இந்நாட்டினர் கொள்கை.

"அச்செல்லா மொன்றாய் அதிலே
இருவகையாய்
வைச்சதென்ன சோணகிரி வள்
ளலே-இச்சையிலே
வாழ்ந்துசில பேரிருப்ப வாய்புதைத்
துக் கைகட்டித்
தாழ்ந்துசில பேர்நிற்கத் தான்"

என்று பெரியோர் பாடியிருக்கிறார்கள்.

அச்சு-உடம்பு; மனுஷ உடம்பெல்லாம் ஒரேயமைப்பாக, மனுடருட் சிலர் செல்வராய்ச் சகலபோக போக்கியங்களையும் விரும்பியபடி அநுபவித்துக்கொண்டு முதலாளிமாரென்று இறுமாந்திருப்ப, வேறு சிலர் வறியோராய் அச்செல்வர் முன்சென்று வாய்போத்திக் கைகட்டிப் பணிந்துநின்று ஏவல் செய்யும் தொழிலாளிகளாக, ஆண்டவனே! நீ ஆக்கிவைத்த காரணமென்ன என்று, ஒரு செந்தமிழ்ப் புலவர் இறைவனையே கேள்வி கேட்கின்றார்.

உலகம் இனிது நடைபெறும் வண்ணந்தான் இறைவன் இப்படிச் செய்தனர் போலும்; இந்தக் காரணம்பற்றி, முதலாளிமார் தொழிலாளரை அடக்கியாள முயல்வதும், தொழிலாளர் முதலாளிமாரைத் தம் பகைவர் போல்நினைத்து நடப்பதும் ஆகாவாம்; இருபகுதியாரும் பரஸ்பரம் ஐக்கியப்பட்டுக் கருமம் ஆற்றினாற்றான் உலகம் நன்மையுறும்.

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—2)

### "நெஞ்சையொளித்தொரு வஞ்சகமில்லை"

"அம்மா, அறிவிலும் அநுபவத்திலும் வயசிலும் முதிர்ந்த நீங்கள் இப்படியெல்லாம் வாயில் வந்தவைகளைச் சொன்னல், ஒன்றுமறியாதவளாகிய நான் செய்வதென்ன? சொல்லுவதென்ன? தம்முடைய மகனின் கதி என்னவாயிற்றோ என்று மாமனர் கலங்குகிறார்; நீங்களும் உங்கள் மருமகனுடைய செய்தி எப்படி முடிந்ததோ என்று கவலைப்படுகிறீர்கள்; அவரையிட்டு நானும் சஞ்சலப்படாமலிருக்க முடியுமா? அவர் எனக்கு அந்நியரல்லர்; ஆனல், அவருக்கு ஏதும் ஆபத்துநேர ஆண்டவன் விடமாட்டாரென்பதே என் திடமான நம்பிக்கை; அவர் விஷயமான செய்தியொன்றும் அகப்படவில்லையெனக் கண்டவுடனே,உங்கள் அண்ணு புறப்பட்டு மலாய் நாட்டிற்குப் போய் என் அண்ணனுடைய உதவியையுங் கொண்டு அவரைப்பற்றி விசாரித்தறியவேண்டியதல்லவோ முறை, அவருடைய கதி என்னவெனத் தெரியாதிருக்கும் நிலையில் மாமா புறப்பட்டு அந்தவூருக்குப் போய் எங்கும் தேடி அவரைக் காண முயற்சி செய்யாமல் வீட்டிற்றனே கவலைப்பட்டுக் கொண் டிருப்பதும் மாமிக்குத் தேறுதல் சொல்லுவதும், அம்மா, நீங்கள் என்விஷயமாக வேறு ஏதோ நினைப்பதும் பெருந்தவறாகும்; மாமா போகவேண்டாம், நீங்களும் போக வேண் ாம், உங்களுடைய வயசிலும் நிலைமையிலும் இந்த நேரத்தில் நான் இருப்பனேயானல் நானே அவரைத் தேடிப் புறப்பட்டிருப்பேன்; தாயே, நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை யென்று சொல்லுவர்; என் கருமமாக நீங்கள் யோசிக்கும் எண்ணம் ஏதும் நிறைவேறப்போவதில்லை. நான் என் மைத்துனருக்கே யுரியவள்; அவருக்கு ஏதும் ஆபத்து நேருமென்று நினைக்க என்மனம் இடங்கொடுக்கவில்லை; அப்படியேதும் நேருமானல் என் நியதியைக் காக்க வழி எனக்குத் தெரியும்: இப்படி நான சொல்லுகிறேனேயென்று, அம்மா, நீங்கள் கவலைப்படவேண்டாம்; என்னையிட்டுக் குறையெண்ண வொண்ணுது" என்று ஆவேசங் கொண்டவள்போற் கண்களில் நீர்ததும்பச் சொல்லி முடித்தாள் சிவபாக்கியம்; இப்படிச் சொல்லக்கேட்ட தாய் திகைத்தபடியிருந்தாள்.

### தாரமுங் குருவுந் தலைவிதி

தாய் சிறிதுநேரம் யோசித்தவண்ணமிருந்து நெட்டுயிர்த்துக் கவலையோடு கூடியவளாய் மகளைப் பார்த்து "எங்கள் அருமைச் செல்வியே, நீ இப்பொழுது எனக்குச் சொல்லி வந்தவை நீதியானலும், இறுதியிலே நீ சொன்னவார்த்தை என்னுயிரைக் கொள்ளைகொண்டு போகிறது; 'தாரமுங் குருவும் தலைவிதி'யென்பது நீ அறியாததல்ல; என் அருமை மருமகனுக்கு ஏதும் ஆபத்து வரவொண்ணுதெனத் தெய்வத்தை எந்தநேரமும் நான் வேண்டிக்கொள்ளுகிறேன்; எல்லாம் அவனருளாலே நடப்பன என்பதையும் படித்த நீ அறிவாய்; தெய்வ சங்கல்பத்தை மாற்றப் பிரமனலும் முடியாது. உங்கள் தகப்பனரும் நானும் என் அண்ணனும் உங்களிருவருக்குமே விவாகஞ் செய்து வைப்பதென நீங்கள் குழந்தைகளாயிருந்த காலத்தில் நிச்சயம் பண்ணி வைத்தது நிசந்தான்; ஆனல் இப்பொழுது தகப்பனரே தமமுடையமகன் உயிரோடு இருக்கிறாரோ இல்லையோ எனச் சந்தேகப்பட்டு மனம் வருந்துகின்றார்; தகப்பனில்லாப் பிள்ளையாகிய நீயும் நெடுநாட்குமரிருப்பதுமுறையல்லவென்றெண்ணி அவர் உன் நன்மையை விரும்பித்தான் உன்னையும் ஒரு கரையிற் சேர்க்கவேண்டுமென எனக்குச் சொல்லுகிறார்; உங்கள் மாமனுடைய சம்மதமில்லாமல் நான் வேறு ஏதும் ஒழுங்கு செய்ய நினைத்தாற்றான் மகளே, நீ என்னைக் குறைசொல்லலாம்; இந்தக்காலத்திலே ஒருபெண், அவளும் இளம்பெண் தனியே இருப்பதென்றால் முடியுமா? ஒருபெண் விவாகமின்றி நீடித்த காலமிருந்தால், உற்றார் சுற்றத்தார் மதியார்; ஊரார் குறை சொல்வர்; பொல்லாத உலகம் எலும்பில்லா நாக்கினல் இல்லாதபழி சொல்லும். நீ நியதியோ டிருக்கிறாயென்பதை உலகம் எப்படியறியமுடியும்? பெண்ணாய்ப் பிறந்தவள், அவளேனும் இளம வயசுள்ளவள், கன்னிப் பருவமுடையவள், வேறு காரணம்பற்றித் தன்னுயிரை மாய்த்தாலும்,உலகம் அநியாயமான காரணத்

தொடர்ச்சி 5ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் நியமனம்

## ஜூன் அல்லது ஜூலையில்

### நிகழலாம் என்கிறார் சட்டக் காரியதரிசி

அடுத்த ஜூன்மாதப் பிற்பகுதியில் அல்லது ஜூலைமாத முற்பகுதியில், பாராளுமன்றத் தேர்தல்கட்கான நியமனங்கள் சமர்ப்பிக்கப்படலாம் எனத் தாம் நம்புவதாக இலங்கைச் சட்டக் காரியதரிசி சென்ற செவ்வாய்க்கிழமை நிகழ்ந்த அரசாங்கசபைக் கூட்டத்தில் தெரிவித்தார்

இவ்விஷயமாக நடந்த விவாதத்தில் புபிலைப் பிரதிநிதியான மிஸ்ரர் டபிள்யூ தகநாயக்கா அரசாங்கசபையில் உள்ள தமது 26 வாடிக்கைக்காரர்களுக்காக, சட்டக் காரியதரிசி குடியேற்றநாட்டுமந்திரியுடன் வாதாடிப் பாராளுமன்றத் தேர்தல்கட்கான சட்டங்களை மாற்ற முயற்சித்தார் என்பது உண்மையா என்று ஓர் கேள்வி கேட்டார். முந்தி வகுத்த சட்டப்படி, இப்போது அரசாங்க சபையில் உள்ள 26 அங்கத்தவர்கள் வித்தியாசாலை மனேஜர்களாகவோ குறித்த சில சங்கம் சபைகளின் அங்கத்தவராகவோ இருப்பதால், பாராளுமன்ற அங்கத்தவராக வரமுடியாது. அந்தச் சட்டங்கள் இப்போது தவிர்க்கப்படலாயின. இதனையே மிஸ்ரர் தகநாயக்கா அன்று குறிப்பிட்டார்,

மிஸ்ரர் தகநாயக்காவின் கூற்றை மிஸ்ரர் சேனநாயக்கா பலமாக ஆட்சேபித்தார். சட்டக் காரியதரிசியை இப்படிக் கூறுவது அவரை அவமானப்படுத்துவதாகும் என்று மிஸ்ரர் சேனநாயக்காவுடன் வேறு சிலரும் கூறினர்.

மிஸ்ரர் தகநாயக்கா: நான் வாடிக்கைக்காரர் என்று ஆங்கிலத்தில் ஓர் சட்டம் சம்பந்தமான பதத்தையே உபயோகித்தேன். அதன் அர்த்தம் சட்ட வல்லுனராய எம் சட்டக்காரியதரிசிக்கு நன்கு விளங்குமன்றி மிஸ்ரர் சேனநாயக்கா போல்வார் கிரகித்தல் அரிது. குறித்த 26 அங்கத்தவர்களுக்காகவும் பரிந்துபேசிய எங்கள் சட்டக் காரியதரிசி, அரசியற் குற்றங்களுக்காகச் சிறை சென்றவர்கள் பாராளுமன்றத்து அபேட்சகராக வரும்விஷயத்திலும் சற்றுச் சிரத்தையெடுத்துக் குடியேற்றநாட்டு மந்திரியுடன் வாதிப்பாரா?

குறித்த சட்டப் பிரமாணத்தை மாற்றவேண்டும் எனத் தாம் வாதிட்டதாக சட்டக் காரியதரிசி ஒப்புக்கொண்டார். மற்றும் அரசியற் குற்றங்களுக்காகச் சிறை சென்றவர்கள் ஒவ்வொருவர் விஷயமும், தேசாதிபதியால் பரிசீலனை செய்யப்படும் என்றும் சட்டக் காரியதரிசி கூறினார்.

## இப்போதே திட்டம்போடுகிறார்

இலங்கை பூரண சுயராச்சிய நாடாக வந்ததும், அந்நிய நாடுகளில் ஸ்தானிகர்களை அமர்த்தி அயல் நாடுகளின் உறவைச் சம்பாதிப்பதற்குத் தக்க ஸ்தானிகர்களை நியமித்தல் வேண்டும். அப்படியானவர்களைப் பயிற்றுதற்கு மந்திரசபையினர் இப்போதே நடைவடிக்கை எடுக்க வேண்டும் என்னும் ஓர் தீர்மானத்தைத் தாம் எடுத்தாளப்போவதாகக் கழனிப் பிரதிநிதி மிஸ்ரர் ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசாங்கசபையில் அறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

## அநுமதி யில்லை!

இலங்கையில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க, மந்திர சபையினர் தவறிவிட்டார்கள்; எனவே அவர்கள்மீது நம்பிக்கையில்லை என்ற ஓர் தீர்மானத்தை புபிலைப் பிரதிநிதியான மிஸ்ரர் டபிள்யூ. தகநாயக்கா பல மாதங்களுக்குமுன் அரசாங்கசபையிற் சமர்ப்பித்தார்.

இந்தத் தீர்மானத்தை விவாதத்திற்கு விடலாமா என்பதுபற்றிச் சென்ற செவ்வாய்க்கிழமை அரசாங்கசபையில் விவாதம் நிகழ்ந்தது. இதனை விவாதத்துக்கு விடலாம் என்று டக்ரர் ஏ. பீ. டீ. சொயிசா மாத்திரமே வாக்களித்தார். ஏனைய அங்கத்தவர்கள் விரோதமாக வாக்களித்தனர். எனவே, அத்தீர்மானம் எடுத்தாளப்படவில்லை.

# பணிய முடியாது!

## தென்னாபிரிக்க வெள்ளையர் திமிர்

தென்னாபிரிக்காவில் வதியும் இந்திய மக்களுக்கு விளைக்கப்படும் அநீதி சம்பந்தமாக, ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் ஓர் தீர்மானம் செய்திருக்கிறது, அதாவது, இந்தியாவும் தென்னாபிரிக்க அரசாங்கமும், இவ்விஷயமாக ஓர் சமரசமுடிவுக்குவந்து ஸ்தாபனத்துக்கு அம்முடிவை அறிவிக்கவேண்டும் என்பது. இத்தீர்மானத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டியது அந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த அங்கத்துவ நாடுகளின் கடமையாகும். ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தை அங்குரார்ப்பணம் செய்தவர்களில் தென்னாபிரிக்கப் பிரதமர் சேனாதிபதி ஸ்மட்ஸ்-ம் ஒருவரானவர்.

ஐக்கியதேச ஸ்தாபனம் செய்துள்ள தீர்மானப்படி தென்னாபிரிக்கா நடக்க முடியாது, இந்த ஸ்தாபனத்தின் கட்டளையை மீறவேண்டும் என்று தென் ஆபிரிக்காப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரான டக்ரர் மலன் என்பவர் ஓர் தீர்மானத்தைச் சென்ற செவ்வாய்க்கிழமை எடுத்தாண்டார் அத்தீர்மானத்தை டக்ரர் மலன் எடுத்தாண்டபோது பின்வருமாறு கூறினார்:-

"நாங்கள் இந்த நாட்டில் சென்ற 100 ஆண்டுகாலமாகச் செய்துள்ள வேலையை நாசமாக்குதலே ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் செய்த தீர்மானத்தின் நோக்கமாகும், எங்கள் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட ஐக்கியதேச ஸ்தாபனத்துக்காவது, வேறெந்தத் தாபனத்துக்காவது உரிமையில்லை இத்தீர்மானம், எங்கள் சுதந்திரத்துக்கும் சுயமரியாதைக்கும் உலை வைப்பதாகும் இந்தத் தென்னாபிரிக்காவில வாழும் வெள்ளையரல்லாத மக்களுக்கு உற்சாகம் கொடுத்து, அவர்களை வெள்ளையர்க்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்யத்தூண்டுவதே இந்தஐக்கியநாடுகள் ஸ்தாபன நோக்கமாகும். இன்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் வெள்ளையரல்லாதாரே அதிகமாக விருக்கிறார்கள்; இவர்கள், நிறமனிதர்க்கு உற்சாகம் ஊட்டி எமக்கு விரோதமாகக் கிளர்ச்சிசெய்யத் தூண்டுகிறார்கள், அவ்வளவு மாத்திரமா? நீங்கள் நாசமாய்ப்போங்கள் என்று எங்களுக்கு—வெள்ளையராகிய எங்களுக்கு சொல்கிறார்கள். இதனைப்போன்ற அக்கிரமம் வேறென்ன இருக்கிறது?"

இந்தத் தீர்மானம் சம்பந்தமாக மறுமொழியிறுத்த தென்னாபிரிக்கப் பிரதமர், ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் தீர்மானித்த பிரகாரம் நடக்கமுடியாதுஎன்றும், இன்று அமுலில் இருக்கும் சகல இந்தியத் துவேஷ சட்டங்கள் இருந்தேதிரும் என்றும், தென்மேற்கு ஆபிரிக்கா விஷயத்திலும் தாம் 1920-ம் ஆண்டு தொடக்கம் எந்த விதமான பரிபாலனத்தைக் கைக்கொண்டனரோ, அதேவித பரிபாலனத்தையே இனிடம் தென்னாபிரிக்க அரசினர் கைக்கொள்ளுவர் என்றும் தெரிவித்தார். இன்னும், இப்படியெல்லாம் வெள்ளையர்க்கு மாறான கிளர்ச்சிக்கு இந்தியர்தான் மூலகாரணர் என்றும் கூறினார்,

## மதம் மாறுதல்

### கோழைத்தனமான செயல்

இந்திய இடைக்கால அரசாங்கத்தில் தொழில் மந்திரியாகவுள்ள காங்கிரஸ்வாதி ஸ்ரீஜுத் ஜகஜீவன்ராம் ஹெயிம்ஸார் என்னும் இடத்தில் ஓர் தாழ்த்தப்பட்ட மக்கள் கூட்டத்தில் தீண்டாதார் மதம் மாறுவது பற்றிக் குறிப்பிட்டார். அவர் சொன்னதாவது:

"சிறுபான்மை மக்களைப் பெரும்பான்மையினர் ஒடுக்கி விடுவதால் பாகிஸ்தானத்தையோ, ஹிந்துஸ்தானத்தையோ அடைந்துவிட முடியாது.

"சில தாழ்த்தப்பட்ட மக்கள், தாம் 'உயர்ஜாதி மக்களால்' ஒடுக்கப்படுவதாக நினைத்து அஞ்சி சில சுயநலவாதிகளின் சொற்களைக் கேட்டு மதம் மாறுகிறார்கள். இது கோழைத்தனம். கோழைகளுக்கு மதமும் இல்லை: கடவுளும இல்லை: சமயானுட்டானங்களும் இல்லை.

"தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உயர் ஜாதி ஹிந்துக்களிடம் இருந்து நீதி கிடைக்கவில்லை என்றால் அவர்கள் தங்கள் நியாயமான உரிமைகளுக்காகப் போராடவேண்டும். அப்போராட்டம் சத்தியம், நேர்மை, என்பவற்றை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். உரிமைகள் கிடைக்காதபடியினால் மதம் மாற நினைப்பது பெருந்தவறு,

"பிரிட்டிஷார் இந்தநாட்டைவிட்டு வெளியேறி, சமூக பொருளாதார நிலைமை மாறும்வரையில் இந்தநாட்டில் எவர்க்கும் உண்மையான சமாதானம் ஏற்படமாட்டாது".

# இனி நடப்பது என்ன?

## கடைசி முடிவு புரட்சியும் இரத்தக் களரியுமா?

அரசியல் நிர்மாணசபை புதுடெல்கியில் சென்ற திங்கட்கிழமை தொடக்கமாக மீண்டும் கூடித் தன் கருமத்தை ஆலோசித்து முடித்துவருகிறது. லீக்கர்களின் உருட்டல்களுக்கும் மிரட்டல்களுக்கும், சேர்ச்சில் அமெரிக் கோஷ்டியின் ஓலங்களுக்கும் மானபிமானத்தைப் பெரிதென மதித்துள்ள இந்திய வீரர் செவிசாய்க்காது தங்கருமமே கண்ணாய்கின்று இந்தியாவின் லட்சியம் குடியரசு தான் என்பதனையு[illegible]ணயித்துவிட்டார்கள். ஆனால், இனி நடக்கப்போவது என்ன? முஸ்லிம் லீக் அரசியல் நிர்மாண சபைக்குட் புகுந்து, எதிர்கால இந்திய முன்னேற்றத்துக்கு உழைக்க விருப்பமில்லாவிட்டால், இந்திய முன்னேற்றம் தடைப்படுவதா?

○

### லீகர் இல்லாவிட்டால்?

மீண்டும் கூடப்பட்ட அரசியல் நிர்மாணசபைக் கூட்டத்தில் லீக்கர்கள் சமுகமளிக்காததைப்பற்றிக் கவலைப்படுபவர் எவருமில்லை என்று இப்போது திட்டமாகத் தெரிகிறது இந்தமுறைக் கூட்டத்திற்கு லீக்கர் சமுகமளிக்கா விட்டாலும் அடுத்த கூட்டத்துக்கு, அதாவது மே மாதத்தில் அவர்கள் சமுகமளிக்கலாம் என்று பல காங்கிரஸ்வாதிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். இதனை நினைத்துத்தான், இப்போது தெரிந்தெடுக்கப்பட்டுள்ள சில உபசபைகளில், லீக்கர்க்கென சில ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. எதிர்பார்த்ததற்கு மாறாக, லீக்கர்கள் வராவிட்டாலும், அரசியல் நிர்மாண சபையின் வேலை ஒருபோதும் தடைப்படமாட்டாது என்று ஓர் பிரபல காங்கிரஸவாதி அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்.

○

### பிரிட்டிஷார் மறுத்தால்?

லீக்கர்கள் இல்லாமலேயே "பீ" 'ஸீ' த்தொகுதிகளுக்குரிய அரசியல் வகுக்கப்படும். இத்தொகுதி-ளில் இன்று வங்காளம் பாஞ்சாலம், சிந்து என்னும் மூன்று மாகாணத்து அரசியலை நிர்மாணிக்காமல் விடலாம். ஏனைய மாகாணங்களுக்கும், மத்திய அரசாங்கத்துக்கு முரிய அரசியலை, அரசியல் நிர்மாணசபை வகுக்கும். இப்படி வகுக்கப்பட்டுள்ள நிர்மாணம் மிக்க நீதியானதாக இருக்கும் என்பதிற் சந்தேகம் இருக்கக் காரணம் இல்லை. இந்த அரசியல் நிர்மாணத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, இந்தியாவை, இந்தியர் வசம் ஒப்புவித்துவிட்டு, மூட்டை முடிச்சுக்களுடன் வெளியேறிவிடவேண்டும். அப்படி இதனை ஏற்க மறுத்தால்?

○

### பிரிட்டிஷாரின் நிலை

பிரிட்டிஷ் அரசாங்கம், முஸ்லிம்லீக் இல்லாமல் வகுக்கப்பட்டது என்ற ஓர் காரணத்தைககொண்டு, இந்திய சுதந்திர அரசியலை ஏற்காமல் விடலாம். அப்படி விட்டால் நடப்பது அனர்த்தம்தான் என்பதை பிரிட்டிஷாரே இப்போது உணரத்தொடங்கிவிட்டார்கள். ஓர் புரட்சி கட்டாயம் ஏற்பட்டேதீரும். இரத்த ஆறு பெருகலாம் அப்போது பிரிட்டிஷார் தாமாகவே பிச்சைவேண்டாம் தாயே நாயைப்பிடி என்றவண்ணமாக ஓட்டம் எடுப்பர் எனக் காத்திருக்கலாம்.

## யப்பானிலிருந்து யந்திரங்கள்

இலங்கையில் கைத்தொழில்களை நிர்மாணிப்பதற்குப் பலவிதமான யந்திரங்கள் தேவை இந்த யந்திரங்களை ஜப்பானிலிருந்து பெறுதற்கு இலங்கை யரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இதன் பொருட்டு கைத்தொழிற்பகுதி என்ஜினியரான மிஸ்ரர் ஜே. ஈ. ஆர். ஹென்ஸமன் என்பவரை ஜப்பானுக்குக் கூடிய சீக்கிரம் இலங்கை யரசாங்கம் அனுப்புமாம்.

## கல்கத்தாவில் இந்தோசீனதினம்

சென்ற செவ்வாய்க்கிழமை கல்கத்தாவில், இந்தோசீனத்து மக்களுக் கனுதாபம் காட்டும் முகத்தால், ஓர் பிரமாண்டமான ஊர்வலம் மாணவர்களால் எடுத்துச் செல்லப்பட்டது ஊர்வலத்தின்போது, பொலிசார்க்கும் மாணவர்களுக்குமிடையே கலகம் ஏற்பட்டதன்பயனாக 60 பேர் சிறையாக்கப்பட்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் விழா

## கொழும்பு விவேகானந்தசபை முயற்சி

கொழும்புவிவேகானந்தசபைமண்டபத்தில் சென்ற 14-1-47ல் பொங்கல் தினம் கொண்டாடப்பட்டது முதலில் பூசையும் வழிபாடும் நடைபெற்றன ஸ்ரீமதி ரங்கராஜனும் ஸ்ரீமதி ஹரிஹரனும் பக்கவாத்திய சகிதமாகத் தோத்திரங்களை இன்னிசையுடன் பாடினார்கள். அன்று தலைமை வகித்த திரு. ஆழ்வாப்பிள்ளை அவர்களும் திரு, S. சரவணமுத்து, தென் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்திருந்த அறிஞர் திரு. சிவகிரி அன்பு கருணையானந்தர், முதலியார் குல. சபாநாதன் ஆகியோரும் சொற்பொழிவுகள் ஆற்றினர்.

ஸ்ரீ சரவணமுத்து சுவாமி அவர்கள் தமது சொற்பொழிவில், தைப்பொங்கல் தினம் சைவர்களுக்குப் புண்ணிய காலமெனவும், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் எனவும், கஷ்ட காலத்தில் உணவளிப்பவன் இறைவனேயெனவும் குறிப்பிட்டுப் பேசினார்கள். பின்னர் திரு. கருணையானந்தர் பேசுகையில் வாழ்க்கையின் நோக்கத்தையும் பொங்கல் விழாவின் சிறப்பினையும் அன்பின் பெருக்கத்தையும்பற்றி பல சான்றுகளோடு குறிப்பிட்டார். இடையிடையே சில பாடல்களை உருக்கமாகப் பாடிச் சபையோரை மகிழ்வித்தார். மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கைத் திறனைப்பற்றிக் குறிப்பிட்டார். பின்னர் முதலியார் குல சபாநாதன் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம் பின் வருமாறு:—

"மார்கழி மாதத்துக் கடைசி நாளில் போகிப் பண்டிகையும், தை மாதப்பிறப்பன்று பொங்கல் விழாவும் அடுத்தநாள் மாட்டுப் பொங்கல் விழாவும் தமிழ்நாட்டில் கொண்டாடப்படுகின்றன. இம்மூன்று விழாக்களுக்குள் தலைசிறந்து நடுநாயகமாக விளங்குவது தைப்பொங்கல் விழாவாகும். மக்கள் உயிர்வாழ்தற்கு இன்றியமையாது வேண்டப்படுவது உணவு இவ்வுணவுக்கு வேண்டிய தானியத்தைப் பெறுவதற்கு விவசாயிகளாகிய தமிழர் ஆவணி மாதத்தில் விதைக்கத் தொடங்குவார்கள். தைமாதம் அறுவடை காலமாகும். பண்டைத் தமிழர் இயற்கை வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர். இவ்வியற்கைப் பொருள்களை வியாபித்து நிற்கும் இறைவனையும் கண்டு வழிபட்டனர். இதனால் விவசாயிகள் தங்கள் உணவுக்கு வேண்டிய தானியம் விளைவதற்குப் பலவகையானும் உதவிபுரிந்த சூரிய பகவானுக்கே அவ்விளைவின் முதற் பங்கினைக் கொடுத்து தம் நன்றி மறவாமையினைத் தெரிவித்தனர். இனி விவசாயிகளுக்கு வயலை உழுதற்குக் காளைகளையும், உரத்தையும், பால், நெய், தயிர் முதலியவற்றையும் உதவி வரும் மாடுகளையும் நினைவுகூர்தற்பொருட்டு மாட்டுப் பொங்கல் விழா நடாத்தப்படும். சூரிய வழிபாடு தமிழ் நாட்டில் மட்டுமன்றி மேனாடுகளிலும் காணப்பட்டது.

"தைப்பொங்கல்தினத்தன்று, தமிழர் தம் சுற்றத்தார் வீடுகட்குச் சென்று "பால் பொங்கிற்று" என்று கேட்கும் சிறந்த வழக்கமொன்றுளது. இது தமிழர் பண்பாட்டின் உயர்ந்த படியினைக் காட்டுகின்றது. தனது வாழ்வுமட்டும் பொங்கினால் போதாது. தன் அயலவரும் தன்னைப்போல் வாழவேண்டு மென்ற பெருங்குணமே இக்கேள்விக்கு அடிப்படையாகவுள்ளது. தன்னைப்போல் அயலாரையும், கிராமத்தையும், நாட்டையும் கவனித்தல்வேண்டும். சமூக ஒற்றுமைக்குரிய தமிழ்த் திருநாளாக இதனைக் கொண்டாடும் கிளர்ச்சி ஒன்று ஏற்பட்டுள்ளது. தைப்பொங்கல்விழா வேறு, மகரசங்கிராந்தி வேறு எனும் நுணுகிய ஆராய்ச்சியால்பொது மக்களுக்கு ஏற்படும்பயன்மிகக்குறைவு. அத்தகைய பிரச்னைகளில் ஈடுபடாமல் தமிழர் சமூக ஒற்றுமையிலும் தமிழ்க்கலை வளர்ச்சியிலும் ஈடுபடுதல் வேண்டும்.

"தைப்பொங்கலன்று புதிய அடுப்பில் புதிய பானை வைத்து, புதிய பச்சையரிசியையிட்டுப் பொங்குகிறோம். அன்றியும் பானையிலுள்ள பால் பொங்கி, வடதிசை அல்லது கிழக்குத் திசை நோக்கிச் சரிந்தால், அவ்வீட்டிலுள்ளவர்களுக்கு அவ்வாண்டு நல்லாண்டாகும் எனக் கருதும் வழக்கமுண்டு. இதனை நோக்குமிடத்து தைப்பொங்கற் றினமே தமிழர் வருடப்பிறப்பெனவும் கொள்ள இடமுண்டு.

"பண்டைக்காலத்தில் விவசாயிக்கு அதிக மரியாதை ஏற்பட்டிருந்தது. உழவுத்தொழில் சிறந்ததெனத் பல ஆன்றோர் அறிவுரைகளுணடு. ஆயின் பிற தொழில்கள் விவசாயத்துடன் போட்டியிட்டு அதனைத் தலையெடுக்கவிடாது அமுக்கிவிட்டன, மேலும் இலகுவில் பணஞ் சம்பாதிக்கத்தக்க வேறு தொழில்களையே மக்கள் நாடுதல் இயல்பு. யுத்தகாலத்தில் எத்தனைபேர் பெரிய கோடீஸ்வரராகிவிட்டனர். விவசாயத்தால் இவ்வளவு தூரம் சம்பாதிக்க முடியுமா? எனினும், விவசாயத்தின் சிறப்பினையும் தமிழர் பண்பாட்டினையும் நினையூட்டும் விழாவாக இத் தைப்பொங்கல் விழா அமைந்துள்ளது என யாம் கருதி ஆண்டுதோறும் கொண்டாடுவோமாக.

தலைவர் முடிவுரையின்பின் சபையின் சார்பாக வித்வான் கனகசுந்தரம் அவர்கள் நன்றி கூறியதும், தேவாரபாராயணத்துடன் விழா இனிது நிறைவேறியது.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### சனி ஜனவரி 25

காலை 7.15 கிராமியம் 7.20 தமிழில் செய்திகள் 7.30 வி கிருஷ்ணமூர்த்திஜயர் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 டி ராஜாத்தி பாட்டு 8.30 காலை இசை 9 முடிவு.

1 வி கிருஷ்ணமூர்த்தி ஐயர் வயலின் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2.05 சர்வகலாசாலைகள் குறிப்பு 2-15 டி எஸ் சண்முக சுந்தரம் பாட்டு 2-45முடிவு,

மாலை 5: டி எஸ் சண்முகசுந்தரம் பாட்டு 5.40 திருமொழி விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி ராஜாத்தி பாட்டு 7.15 நாணயமதிப்பு 7-30 தமிழில் செய்திகள் 7-45 மதராசிலுள்ள படி எஸ் சோமசுந்தரம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 இசைமேளை இசைத்தட்டு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானலை 9.45 கே பி தேவராஜ சாக்ஸபோன் 10 இசைமேளை இசைத்தட்டு 10-30 முடிவு.

### ஞாயிறு ஜனவரி 26

காலை 7-15 கிராமியம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எஸ் ஐயா, எஸ் ஸ்ரீமதி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 கிளாரினெட் இசை 8-30 ஜே வி ராகவன் பாட்டு 9 முடிவு.

12 கதம்பம் இசைத்தட்டு 12.30நினைப் புநாடகப்பும் 12.40 ஆனந்த பணமெலி பாய் 12.45 சேவை! மனுசாரர்கள் தேவை! நாடகம் 12.55 புத்திசை 1 மணிமாலை 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 கே ஜே சோஸ் தில்ருபா பி எஸ் வைத்தி நாதன் வயலின் 2 தமிழில்செய்திகள் 2-05 பெண்ணுலகம் 2.30 நீங்கள் கேட்டவை 3 முடிவு.

மாலை 5: மதுரை காமுஅம்மாள் வீணை 5-40 தேவாரா[illegible] திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராமநிகழ்ச்சிகள் 7 எஸ ஐயா, எஸ் ஸ்ரீமதிபாட்டு 7.30 தமிழில் செய்திகள் 7-45 திரைப்பட விமர்சனம் 8 சே வி ராகவன் பாட்டு 8.30 மதுரை காமு அம்மாள் வீணை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 கமலா கிருஷ்ணமூர்த்தி இசைத்தட்டு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானலை 9.45 டி எஸ் வெங்கடாசலம் பிள்ளை வயலின் 10.30 முடிவு.

### திங்கள் ஜனவரி 27

காலை 7-15 கிராமியம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி கே ஆர் மாரிக்கண்ணு பிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 புதிய பாடல்கள் 8.30 எம் சுப்பிரமணிய முதலியார் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எம் சுப்பிரமணிய முதலியார் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 எம் சுப்பிரமணிய முதலியார் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை: 5 டி கே ஆர் மாரிக்கண்ணு பிள்ளை நாகஸ்வரம் 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 ராசாலை பி பொன்னம்மாள் பாட்டு 7.30 தமிழில் செய்திகள் 7-45 சுய ஆட்சி இந்தியவில் 8 பாரசாலை பி பொன்னம்மாள் பாட்டு 8-30 நாதஇசை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 லக்ஷுமி லோக சுப்ரமணியம் இசைத்தட்டு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானில் 9.45 எம் என் நடராசபிள்ளை புல்லாங்குழல் 10 இசைமேளை 10-30 முடிவு.

### செவ்வாய் ஜனவரி 8

காலை: 7-15 கிராமியம் 7.20 தமிழில் செய்திகள் 7 30 ஆர் சுப்பிரமணியம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 வீணை தனம்மாள் இசைத்தட்டு 8-30 கும்பகோணம் வி பி ராஜேஸ்வரி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 கும்பகோணம் வி பி ராசேஸ்வரி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கும்கோணம் வி பி ராசேஸ்வரி பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு

மாலை 5 ஆர் சுப்பிரமணியம் பாட்டு 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 தாளவாத்தியக் கச்சேரி 7.15 பேனுகத்தி 7.30 தமிழில்செய்திகள் 7.45 பல்லடம் சஞ்சீவராவ் புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானில் 9.45 கே ஷி கா[illegible] கேட்டவை 10.30 முடிவு.

# பல்—அதன் சுகாதாரம்

[V. T. பசுபதி, L. O. SC., Lahore.]

குழந்தைப் பருவத்தில் காணப்படும் பற்களுக்கு நிலையற்ற பற்கள் (Deciduous Teeth) என்றுபெயர். ஒவ்வொரு தாடையிலும் உளிப்பற்கள் நான்கும், கோரைப்பற்கள் இரண்டும் கடைவாய்ப் பற்கள் நான்குமாக மொத்தம் இருபது பற்கள் இவ்வகையைச் சேர்ந்தவை. இவையாவும் ஏழாம் வயதில் விழுந்துவிடும். அதன்பின் முளைக்கும் நிலைப் பற்களின் (Permanent Set) வளர்ச்சியின் போக்கு இப்பற்களைச் சார்ந்திருப்பதால், சிறு குழந்தைகளாய் இருக்கும்போதே பற்களைப் பேணி வைக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

சுமார் 25-வது வயதில்தான் எல்லாப் பற்களும் ஒரு மனிதனில் காணப்படும், கடைசியாய் வரும் நான்கு கடைவாய்ப் பற்களும் அறிவுப்பற்கள் (Wisdom Teeth) என்று பெயர், அறிவு உதயமாகும் சமயத்தில் இவை தோன்றுவதால் இப்பெயர் பொருத்தமாகும்.

பல்லின் அமைப்பு மகா விசித்திரமானது. தாடை எலும்பில் பதிந்து கிடக்கும் பாகத்திற்கு வேர் என்றும் வெளியில் தெரியும் பாகத்திற்குச் சிகரமென்றும் பெயர். இதைச் சுற்றிலும் தந்தம் என்ற பொருள் இருக்கிறது மிகவும் கடினமானது இதன் இயற்கை நிறம் தூயவெள்ளை. சரியாய் சுத்தப்படுத்திவிட்டால் ஒருவித மஞ்சள் படல் படரும், வெற்றிலை புகையிலை முதலியவை போடுவதாலும், 'சிகரெட்' சுருட்டு முதலியவை புகைப்பதாலும் பல்லின் வர்ணம் மாறுபடலாம். விசேஷமா பற்களுக்குப் பின்புறத்தில் ஊத்தை பிடிக்காமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அப்படிப் பிடிக்குமானால் பல் வைத்தியரின் உதவியைக்கொண்டு அதை நீக்கிவிடவேண்டும்,

பல் வைத்தியர் என்ற உடனேயே சிலர் பயப்படுகிறார்கள். யாது காரணத்தினாலோ அவரையும், இராட்சதனையும் சமமாகப் பாவிக்கிறார்கள். பல் வைத்தியர் உங்களுடைய சிநேகிதர். அவரை வருஷத்துக்கு இருமுறையாவது சந்தியுங்கள். உங்கள் பற்களின் நிலைமையை அப்போதுக்கப்போது தெரிந்து கொண்டு, உடனுக்குடன் சிகிச்சை முறைகளைக் கையாடினால் தேகசுகநிலை கெடாமலிருக்க உதவியா யிருப்பதுடன் பணச்செலவும் குறையும். பல் வைத்தியரைப் பகைவராகப் பாவிக்கும் மனப்பான்மை அகலவேண்டும்.

பல் துலக்குவதற்காகச் சிலர் மணலையும் செங்கற் பொடியையும் உபயோகிக்கிறார்கள். சிலர் ஆற்றில்நின்று குளித்தபடியே குனிந்து மணலை எடுத்து பல் துலக்குவதை நான் பார்த்திருக்கிறேன். இப்படிச் செய்வதால் எனமலில் கீறல் உண்டாகி பல்லுக்குக் கெடுதி விளையும். மிகக் குளிர்ந்த அல்லது மிகச் சூடான பானத்தை அருந்தினாலும் அப்படித்தான்.

பல்லைத் துலக்குவதற்கு விலையுயர்ந்த பற்பசைகளைத்தான் உபயோகிக்க வேண்டியதில்லை, கருவேலங் குச்சிகளும், வேப்பங் குச்சிகளுமே சிலருக்குப் போதுமானவை. "ஆலும் வேலும் பல்லுக்குறுதி" என்ற பழமொழி எல்லா அங்கீகாரத்திற்கும் பாத்திரமானது. ஐரோப்பியர் லனேகர் இரவில் படுக்கைக்குப் போகும் முன்பும், காலையில் எழுந்தவுடனும் பல்லைத் துலக்குகிறார்கள். இது நமக்கு ஒரு சிறந்த முன்மாதிரி,

நாம் உண்ட உணவில் மிஞ்சிய சிறு அணுக்கள் பற்களுக்கிடையே அகப்பட்டுக்கொண்டு அழுகி நோய்க் கிருமிகள் வளர வசதியளிக்கின்றன. சாப்பிட்டவுடன் வாயை நன்றாய்க் கொப்பளிக்க வேண்டியது எவ்வளவு அவசியமென்பதை இது எடுத்துக் காட்டுகிறது. சில சமயங்களில் எயிறுகளில் சீழ் உண்டாகலாம். இது வயிற்றுக்குள் போய் இரத்தத்துடன் கலந்து வாதநோய் உண்டாகக்கும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட வியாதியுடையவர்கள் செய்யவேண்டிய சிகிச்சை, மூலகாரணமாயிருக்கிற அப் பற்களை பிடுங்கிவிடுவதுதான்.

பல்லின் மத்திய பாகத்திலுள்ள பற்சோற்றுக்குள்ளேதான் இரத்தக் குழாய்களும் நரம்புகளு மிருக்கின்றன. பல்லில் இரத்த ஓட்டம் இருக்க வேண்டுமானல் மற்ற அவயவங்களைப்போலவே அதற்கும் ஓரளவு அப்பியாசம் தேவை. பல்லுக்கு எப்படி அப்பியாசம் கொடுப்பது என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். அப்படிப் பிரமாதம் ஒன்றுமில்லை. சற்றுக் கடினமான பொருள்களையும் நமது உணவுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

## 20,000 பவுனுக்கு வைரங்கள்

பிரிட்டிஷ் மன்னர் தம்பதிகள் சமீப காலத்தில் தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்வர். அப்போது, மன்னரின்சிரேஷ்ட புதல்வியாகிய எலிசபெத் இளவரசியின் ஜென்மதினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு, அவர்க்கு 20,000 பவுண் மதிப்புள்ள வைரங்களைச் சன்மானிக்கத் தென்னாபிரிக்க அரசாங்கம் நிச்சயித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தையல்லவா சொல்லும்; அல்லாமலும், இந்தக் காலத்திலே விவாக நிச்சயஞ் செய்து, மாப்பிள்ளை பெண் வீட்டிற்குப் போகிற சமயத்திலே, சீதனப் பிணக்கினாலோ, வேறு காரணத்தினாலோ கல்யாணங் குழம்பிவிட, அந்த மாப்பிள்ளைக்கு வேறு பெண்ணையும், அந்தப் பெண்ணுக்கு வேறு மாப்பிள்ளையையும் உடனுக்குடன் ஒழுங்குப்பண்ணிச் சடங்கு செய்துவைத்ததையும் அறிவோம்; ஆனதால், மகளே, உலகத்திலே நடவாதவொன்றை நான் சொல்லவில்லை: செய்யாத தொன்றைச் செய்யச் சொல்லி உன்னைக் கேட்கவுமில்லை; ஆண்பிள்ளையென்றால் காரியமில்லை. அவன் சமயம் வரும்போது தன்கருமத்தைத் தானே முயற்சிபண்ணிச் செய்துகொள்ளுவான்: அதனாற்றான் உன் அண்ணன் விஷயமாக நான் ஏதொன்றும் இப்போது பேசவில்லை; நீயோ பெண்பிள்ளை; உன் கருமங்களைப் பெற்றோர் சுற்றத்தார் பெரியோர் அந்த அந்தக் காலத்திலே பார்த்து நிறைவேற்ற வேண்டியதே முறை; உங்கள் அப்பர் உயிரோடிருந்தால் நான் இப்படிக் கவலைப்பட நேர்ந்திராது; ஆனதால், மகளே நீ இன்னமுஞ் சின்னஞ்சிறிய பிள்ளையல்லை; எல்லாவற்றையும் நல்லாய்யோசித்துப்பார்; பெற்றவள் சொல்லைத் தட்டாதே; உங்கள் மாமனார்போன்ற பெரியோர் சொல்லும் புத்தியைக்கேள்; மேலும் உன் அண்ணன் ஐவகைப் பிதாக்களுள் ஒருவனல்லவா? அவனையும் மனம் வருந்தச் செய்யாதே..........." என்றுதன்மகளுக்குச் சொல்லிமுடித்தாள்.

### "கடைசியிலே உண்மைதான் வெளிவரும்"

"அம்மா, உலகத்திலே எத்தனையோ இடத்திற்பேசி நிச்சயஞ்செய்த கல்யாணம் சமயத்திலே குழம்பிவிட, அந்தப் பெண்ணுக்கும் அந்த மாப்பிள்ளைக்கும் முறையே வேறு மாப்பிள்ளையையும், வேறு பெண்ணையும் உடனுக்குடன் ஒழுங்குசெய்து, கல்யாணத்தை நிறைவேற்றி விடுகிறார்களென்று சொல்லுகிறீர்கள்: அப்படி உடனுக்குடன் ஒழுங்குபண்ணிக் கல்யாணஞ் செய்வதற்குப் பெண்ணும் மாப்பிள்ளையும் சம்மதித்தால், அதில் ஒரு சங்கடமுமில்லையென்பது மெய்; ஆனால், அம்மா, அந்தவிதமான கல்யாணங்களை ஆறறிவுள்ளவர்களெனச் சொல்லும் மனிதர்களே செய்யத் தலைப்பட்டால், மிருகங்களுக்கும் அந்த ஆடவர்பெண்களுக்குமிடையே யுள்ள பேதமென்ன? மிருகங்கள் தாம் இயற்கையின்படி நடக்கின்றன; இவர்கள் இயற்கைக்கு மாறாக மனச்சாட்சிக்கு விரோதமாக அப்படிச் செய்யத் தலைப்பட்டால், இவர்களை மிருகங்களிலுங் கடையானவரென்றுதான் எண்ணிக்கொள்ளவேண்டும்; உற்றார் மதியார், ஊரார் குறை சொல்வர், உலகம் பழி சொல்லுமென்று பயப்படுகிறீர்கள்; நம் நெஞ்சந் தூய்மையாயிருந்தால், நாம் தெய்வத்திற்கும் நம் மனச்சாட்சிக்கும் மாறுபடாமல் நடந்தால், ஊரார் குறை சொன்னாலென்ன, உலகம் பழி சொன்னாலென்ன, கடைசியிலே உண்மைதான் அம்மா வெளிவரும்; ஒருவர் நன்மையையாக, தீமையையாக மறைவாகச் செய்தாலும் பூமாதேவி காலகதியிலே உண்மையைக் காட்டிவிடுவாள் அம்மா; நான் அவரையே வரித்திருந்தமை போலவே, அவரும் என்னையே தம் மனத்தினால் நிச்சயித்திருப்பர்; தாயே! நாங்கள் உலக்கை தேய்ந்து உளிப்பிடியானவாறு, எங்கள் மூதாதையர் மூதாட்டிகளின் மேலான நிலைமையைக் கைவிட்டுச் சாதி நெறி விட்டு மிகவும் ஈனமான கதியை இப்பொழுது அடைந்திருக்கிறோமென்பது நிசமானாலும், அந்தக் கற்புநெறி தவறாத் தமிழ் மூதாட்டிகளின் வழித்தோன்றல்களென்பதை மறந்துவிடலாமா? தமக்கென வரித்த கணவன் யுத்தமுனையில் மாண்டுபோக, தாமும் உடனே தம்முயிரை விட முயன்றபோது, தம் அருமைத் தம்பியார் உயிர்விடவேண்டாம் உயிரோடிருந்து தம்மைப் பாதுகாக்க வேண்டுமென்று இரக்க, அதற்கு உடன்பட்டுக் கைம்மை விரதங் காத்துச் சிவதொண்டாற்றி, தம்தம்பியாரைப் புறச்சமய நெறியிற் புகுந்து இடர்ப்படாவகை தடுத்து எங்கள் சைவசமயத்தையும் சிவசின்னங்களையும் ஓங்கச் செய்த சிவநெறிச் செல்வியாராகிய திலகவதியார் அவதரித்த வேளாண்குலத்திற்பிறந்தவள் தானேயம்மா நானும்; அத்திலகவதியார் கடைப்பிடித்த மேலான நெறியை நாமுங் கடைப்பிடிக்கலாந்தானே; அவருக்கு ஏதும் ஆபத்து நேர்ந்தால், அத்திலகவதியார் செய்தது போற் செய்யலாமென்பதுதான் அம்மா, என் நோக்கம். ஆனதாற் கவலைப்படாதீர்கள்" என்று தன் தாய்க்குத் தேறுதல் சொன்னாள் சிவபாக்கியம்

### திலகவதியார்

தன் பிள்ளை சொல்லியவற்றைக் கேட்டு ஒருவாறு தேறுதலடைந்த தாய் பின்னரும் மகளைப் பார்த்து "மகளே, திலகவதியாரென்ற பெயரை உங்கள் அப்பர் இடையிடையே சொல்லக் கேட்டிருக்கிறேனேயொழிய அந்தத் திலகவதியாரின் வரலாற்றை விபரமாக அறியேனடியம்மா, அந்த உத்தமியின் கதையை எனக்குச் சொல்லடி கண்ணே" என்று கேட்க, மகள் சொல்வாளாயினள்:—

'அம்மா, திலகவதியார் எங்கள் சைவசமய குரவருள் ஒருவராகிய அப்பர் சுவாமிகளெனப் போற்றப்படும் திருநாவுக்கரசு நாயனாருடைய தமக்கையாராவர்; இவர்களுடைய பெற்றோர் திருமுனைப்பாடி நாட்டைச் சேர்ந்த திருவாமூரிலே வேளாண்குலத்திலே பிறந்தவர்கள்; தந்தையார் பெயர் புகழனார், தாயார் பெயர் மாதினியார்; திலகவதியார் பன்னிரண்டு வயசுப் பராயம் அடைந்தபோது தகப்பனாராகிய புகழனார் தம் மரபினரோடு ஒத்த மரபினராகிய கலிப்பகையார் என்பவருக்கு மணம்பேசி நிச்சயித்திருந்தார்; கலிப்பகையாரே தமக்குக் கணவர் என்ற நியதியோடு திலகவதியாருமிருந்தார்: கலிப்பகையார் கல்வியறிவு, தெய்வபக்தி, ஆண்மை, அழகு, ஒழுக்கம் முதலாம் மேலான குணங்களோடுஞ் செயல்களோடுங் கூடியவர்: அவர் அந்த நாட்டு அரசனுக்குரிய நால்வகைச் சேனைகளுக்குந் தலைவராகக் கடமை செய்துவந்தார். கலிப்பகையாருக்கும் திலகவதியாருக்கும் விவாகம் நடைபெறுதற்குச் சிலநாட்களிருப்ப, அந்த நாட்டு அரசனுக்கும் வடநாட்டு அரசனுக்குமிடையே போர் மூள, அந்தநாட்டரசன் கட்டளைப்படி கலிப்பகையாரே சேனைத் தலைவராய் அரசனுடைய சைநியங்களை வடநாட்டெல்லைக்கு நடத்திச் சென்றார். இரு பகுதிச் சைநியங்கட்குமிடையே பல நாட்களாகக் கொடிய யுத்தம நடக்கலாயிற்று; இதற்கிடையில் திலகவதியாரின் தகப்பனாராகிய புகழனார் நோய்கண்டு இறந்துபோக, அவருடைய கற்பிற் சிறந்த மனைவியாரும் உடன்கட்டையேறித் தம் முயிரை விட்டார், இதனால், திலகவதியாரும், இளமைப் பருவத்தில் மருணீக்கியார் என்னும் பெயர் கொண்ட தம்பியாராகிய அப்பர் சுவாமிகளும் அன்னை தந்தையரில்லாத அநாதப் பிள்ளைகளாய்க் கலங்கலாயினர்; இவர்கள் இப்படிக் கலங்கும்போது, "பட்ட காலே படும் கெட்டகுடியே கெடும்" என்றவிதமாக, கலிப்பகையார் பகைவருடன் கடுஞ்சமர் புரிந்து இந்தப் புவியும்பை [illegible] விட்டுப் பெருமபட்டம் பெற[illegible]றுக்கொண்டார்: அந்தத் துக்கசமாசாரம் திலகவதியார் காதிற் பட்டமாத்திரத்தே திலகவதியார் "என்னுடைய பிதா மாதாக்கள் என்னை அவருக்கு மணஞ்செய்துகொடுக்க உடன்பட்டிருந்தமையால், இவ்வுயிர் அவருக்கே உரியது; ஆதலால், இவ்வுயிரை அவருயிரோடும் இசைவிப்பேன்" என்று சாகத் துணிந்தார்: அதுகண்ட தம்பியாராகிய மருணீக்கியார் விரைந்து வந்து, திலகவதியாருடைய இரண்டு பாதங்களிலும் விழுந்து அழுது "அடியேன், நம்முடைய பிதாமாதாக்கள் இறந்தபின்னும் உம்மையே அவர்களாகப் பாவித்துப் பூசிக்கலாமென்றல்லவோ உயிர் வைத்துக்கொண்டிருக்கிறேன்; அடியேனைத் தனியேவிட்டு இறப்பீராயின், அடியேன் உமக்கு முந்தியே இறந்துவிடுவேன்" என்றார். திலகவதியார் அதுகேட்டுத்தம்பியார் உயிரோடு இருக்கவேண்டுமென்னும் ஆசையால், தமது கருத்தைத் தடுத்து உயிர்தாங்கி, வேறொருவரையும் விவாகஞ் செய்யாது சீவகாருண்யமுள்ளவராகி வீட்டிலே தவஞ் செய்துகொண்டிருந்தார்.

### திலகவதியார் திருத்தொண்டு

"திருவாமூரிலே இருந்த திலகவதியார் சிவபெருமானிடத்திலே பத்திமிகுந்து, சிவபுண்ணியங்கள் செய்ய விரும்பி, கெடிலநதிக்கு வடகரையில் இருக்கின்ற திருவதிகைவீரட்டானம் என்னுந் திருப்பதியிற் சென்று பரமசிவனை வணங்கி, சிவசின்னங்களைத் தரித்து, தினந்தோறும் சூரியோதயத்துக்கு முன்னே திருக்கோயிலின் உள்ளும் புறமும் திருவலகிடுதல், கோமயத்தினாலே மெழுகுதல் திருநந்தனவனங்களிற் சென்று புஷ்பங்களைப் பறித்துக்கொண்டு வந்து திருமாலை தொடுத்துச் சுவாமிக்குச் சாத்தக் கொடுத்தல் முதலாகிய சிவபுண்ணியங்களைச் செய்துவந்தார், செய்துவரு நாளிலே, தம்முடைய தம்பியாராகிய மருணீக்கியார் கபட மார்க்கமாகிய ஆருகதத்திலே பிரவேசித்தமையை நினைந்து, துக்கசாகரத்தில் அமிழ்ந்தி வீரட்டானேசுரரை வணங்கி "சுவாமீ தேவரீர் அடியேனை ஆட்கொள்பவர் என்பது சத்தியமாயின் தவமென்று சொல்லிப் பாயை இடுக்கித் தலைமயிரைப் பறித்தெறிந்துவிட்டு, நின்றுகொண்டே உண்கின்ற சமணர்களுடைய கபட மார்க்கமாகிய படுகுழியிலே விழுந்த தமியேனுடைய தம்பியை அதினின்றும் தூக்கிக் காப்பாற்றியருளல் வேண்டும்" என்று பலமுறை விண்ணப்பஞ் செய்தார். பரமசிவன திலகவதியாருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "தபோதனியே, நீ உன் மனக்கவலையை ஒழி, உன்னுடைய தம்பி துறவியாக நம்மை அடையும் பொருட்டுப் பூர்வசன்மத்திலே தவஞ் செய்திருக்கின்றான். அந்தத் தவத்திற் சிறிது வழுவுற்றதினாலே அந்நிய மதத்திலே பிரவேசித்தான். இனி அவனைச் சூலைநோயினாலே வருத்தி ஆட்கொள்வோம்" என்றுசொல்லி மறைந்தருளினர். அப்படியேஎம்பெருமான் அப்பர்சுவாமிகள் வயிற்றிற் சூலைநோயையாக்க, அவர் அந்நோயின் வேதனை சகிக்கலாற்றாது தமது சகோதரியிடம் அடைக்கலம் புக, அவ்வுத்தமியார் விபூதி உருத்திராக்கமென்னுஞ் சிவசின்னங்களைத் தம்பியார் அணியச் செய்து ஐந்தெழுத்தை அவருக்கு உபதேசித்து அவரையும் சிறந்த சிவனடியாராகச் செய்தாரென்று பெரியபுராணத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது அம்மா, நானும் அந்த அம்மையார் வாழ்ந்த வாழ்க்கையை விரும்புகிறேன்" என்று மகள் அன்புடன் கூறினாள். —வரும்

[சென்றவாரம் வெளிவந்த உலகம்பலவிதக்கதை மூன்றும் பந்தியில் "உன் அண்ணன்" எனத் தவறாய் வந்ததை என் அண்ணன் எனத் திருத்திக்கொள்க.]

### உலகம் பலவிதக்கதை நயம்

மா, சிவதாஸ், திருகோணமலை

ஈழமணித் திருநாட்டின் எழில்விளக்கம்
யாழ்ப்பாணத் திசைவிளக்கம்
சூழவரு தமிழறிஞர் சுடர்விளக்கம்
தெளிபொருட்செஞ் சொல்விளக்கம்
ஆழமுள சைவமத அடர்விளக்கம்
ஐந்தெழுத்தின் அணிவிளக்கம்
வாழவகை உலகம்பல விதக்கதையால்
தெளிவிளக்கம் [illegible] தென்னே!

# காளியிடம் சொல்

### கல்கத்தாக் கலக அக்கிரமம்

சென்ற ஆகஸ்ட்டு மாதம் 16-ம் திகதி இந்திய முஸ்லிம் லீக் தீர்மானித்த "நேரடிப் போராட்ட"த்தின் காரணமாகக் கல்கத்தா நகரத்திற் பயங்கரமான கலகம் நிகழ்ந்து அதன்பயனாக ஆயிரக்கணக்கானோர் மாண்டனர், கோடிக் கணக்கான ரூபாய்கள் பெறுமதியான பொருள்கள் நட்டமாயின. இக்கலவரத்தைப்பற்றி விசாரணைபுரிய, இந்தியச் சமஷ்டி நீதிஸ்தலப் பிரதம நீதியரசர் சேர், பற்றிக் ஸ்பென்ஸ், நீதிபதி சோமையா, நீதிபதி சேர் பஸ்ல் அலி என்னும் மூவரையும் கொண்ட விசாரணைச் சபை நியமிக்கப்பட்டிருக்கிறது, இந்த விசாரணைச்சபை இப்போது பல சாட்சியங்களை விளங்கியிருக்கிறது, சாட்சிகளில் ஒருவராய, கல்கத்தாப் பிரதிப் பொலிஸ் அதிகாரி மிஸ்ரர் நோர்ட்டன் ஜோன்ஸ் என்பவர் சென்ற 19ம் திகதி கொடுத்த வாக்குமூலத்தில் பல திடுக்கிடும்படியான விஷயங்கள் வெளிவரலாயின.

கல்கத்தா உதவிப்பொலிஸ் அதிகாரியாயிருந்த மிஸ்ரர் அப்துல் கபார் என்னும முஸ்லிம், கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களைக் கையாடியிருக்கிறார் என்று காங்கிரஸ் சார்பாக வாதித்த நியாயவாதி வெளியிட்டார் அதனை மிஸ்ரர் நோர்ட்டன் ஜோன்ஸும் ஓரளவுக்கு ஒத்துக்கொண்டார்.

இப்படியான கலவரங்கள் நிகழ்ந்தபோது தனிப்பட்ட மனிதர் பொலிசாரிடம் உதவிகேட்டபோது, "காளியிடம் போங்கள்; உங்கள் தேவதையிடம் போங்கள், காங்கிரசிடம் போங்கள்" என்று, பொலிஸ் அதிகாரிகள் சிலர் உதாசினமாகக் கூறினர் என்று நியாயவாதிகுறிப்பிட்டார்.

இன்னும் சில ஐரோப்பியப் பொலிசார், ஓர் இரும்புப் பெட்டகத்தைத் தூக்கிக் கொண்டு போய், அதனை உடைப்பித்துப் பார்த்தார்கள் என்றும் விசாரணையிற் கூறப்பட்டது.

### தேகவியோகம்

வண. சுவாமி ஞானப்பிரகாசர்

பிரபல கத்தோலிக்க குரவராய், சிறந்ததமிழறிஞராக, பிரசித்திபெற்ற கலையாராய்ச்சிவல்லுநராக விளங்கிய நல்லூர் வண. சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் சென்ற புதன்கிழமை (22-1-47) இவ்வுலகவாழ்வை யொருவினர் என்னும் துக்க சமாச்சாரத்தை அறியலானோம். அவர் இறக்கும்போது வயது 72.

### தானவரவு

இப்பொழுது வண்ணேற்கு "கல்லூரித்"தெரு 37-ம் இலக்க வீட்டில் வசிக்கும், திரு. வ. க பொன்னையாச் சோதிடர் தமது தந்தையின் சிரார்த்தத்தில், யாழ்ப்பாணஞ் சைவ பரிபாலனசபைக்குத் தானமாக வரித்தனுப்பிய ரூபா 2 பெற்றும்.

மனேஜர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமயம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேற்றுமைகள் சமமாயுமிருக்கும். வேற்றுமை குறைந்தும் ஒற்றுமை மிக்கிருத்தலையுங் காணலாம. பல பேதப்பட்ட எல்லா மதங்களையும் சமமாகக்கொள்ளுதல் பொருந்தாதென்பது அறிஞர்களுடைய துணிபு. பெரியோர்களுடைய கருத்தை நிராகரித்தல் தக்கதன்று.

சைவசமயிகளுள் அநேக மூடர் துட்ட தேவதைகளாகிய காடன் மாடன் முதலியவைகளைப் பரம்பொருளென்று வணங்குகிறார்கள், சிலர் கத்தோலிக்கருடைய மரியை கோயிலுக்குப்போய்க் காணிக்கை செலுத்துகிறார்கள். படித்தவர்கள் எத்தனையோ பேர் அல்லா, சிவன், ஏசோவா, புத்தன் முதலியன வெல்லாம் பெயர்கள்; எப்பெயரையும் கடவுட்கிட்டு வழங்கலாம் என்கின்றனர். அவர்களும இந்தப் படிப்பாளிகளும் பட்டத்தளவில் வேறுயினும் கொள்கையளவில் ஒருவரேயாவர். மூடத்தனமும் போலிப் படிப்பும் இருக்கும்வரை எல்லாச் சமயங்களும் ஒரே போதனையைச் செய்வன போலத் தோன்றும். உண்மை ஞானம் விளங்கினல் சமயங்களிற் பேதமிருப்பது தெரியவரும்.

சமயத்தைத் தமிழ்ச் சமயமென்று கல்லறிவில்லார் சிலர் சொல்லுகிறார்கள். இக்காலத்தில் சில படித்தவர்கள்தாமும் தமிழபிமானத்தாற் போலும் சைவம தமிழுக்கே உரியது; சைவத்துக்குரிய சிவனுந் தமிழனே; சிவனுக்குரிய மந்திரங்களும் தமிழேயாகவேண்டும் என்று போதிக்கிறார்கள், சைவசமயம் வியாபகமானது. சிவபெருமான் எவ்வுருவுமாவர்; சைவர்களும் தமிழர்கள் மாத்திரமேயல்ல என்பதே மேலான நோக்கம், சைவர் வைஷ்ணவர் மாத்துவர் முதலிய ஆஸ்திக மதத்தவர்கள் எல்லோரும் தமிழகம் தெலுங்ககம் கன்னடம் பாஞ்சாலம் முதலான எத்தேசத்தவராயிருப்பினும், தேவதாமந்திரங்களை வடமொழியிலேயேசொல்லி வருகிறார்கள். இம மந்திரங்கள் மொழிபெயர்க்க இயலாதன. திருநாவுக்கரசு நாயனார் முதலிய மெய்யடியார்கள் "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" "ஆரியத் தொடுசெந்தமிழ்ப்பயனறிகிலா அந்தகர்" என்று வடமொழி தென்மொழிகட்குரிய தொடர்பை நிலைநிறுத்தியிருக்கிறார்கள். இங்ஙனங் கூறிய தென்னையென ஆராயின்: இவ்விரு பாஷைகளிலுமுள்ள ஞானநூலறிவின்றிச் சிவனை அறியமுடியாது என்பதாம். பாஷாபிமானத்திலும் சமயாபிமானமே சிறந்ததாமென்று எல்லோருடைய மனத்திலும் பதிந்திருக்கத்தக்கது.

சிவபெருமானுக்குச் சத்தியென்று சொல்லப்படுவது, அக்கினிக்குச் சூடுபோல அச்சிவத்தோடு அபின்னமாகிய திருவருளேயாம், அந்தச் சத்தியே உமாதேவியார் என்று சொல்லப்படுவர். விநாயகர் சுப்பிரமணியர் வைரவர் வீரபத்திரர் முதலிய மூர்த்தங்களும் ஆன்மாக்களுக்கு அருள்செய்யும் பொருட்டுச் சிவபெருமான் கொண்டருளிய மூர்த்தங்களையாம் இவர்களைக் குறித்துச் செய்யப்படும் வணக்கங்கள் சிவபெருமானைக் குறித்துச் செய்யப்படும் வழிபாடாகவே கருதப்படும். விஷ்ணுவைச் சிவனடியாராக வழிபடுகிறோம். ஐயனார் ஹரிஹர புத்திரனெனப்படுவர்.

சிவவழிபாடானது நித்தியம் நைமித்திகம் காமியமென மூத்திறமாகக் கொள்ளப்படும். அம்மூவகை வழிபாட்டில் நித்தியமாவது சந்தியா வந்தனம் சிவபூசை முதலியனவாம். நைமித்திகமாவது பிரதிஷ்டை உத்சவம் தீக்ஷை முதலாயினவாம். காமியமாவது இட்டசித்திகளைப் பெறவிரும்பி இறைவனை விசேஷமாக வழிபடுதலாம். விரதங்கள் பயனை விரும்பி நோற்கப்படுவதும் பயனை விரும்பாது நோற்கப்படுவதுமென இரு திறப்படும். விரதமநுட்டிப்பதால் கடன் வறுமை பிணி பயம் முதலியன நீங்கப்பெறுதல் பிரசித்தம், புத்திரப் பேற்றை விரும்பினோர் அதனைப் பெறுவர். செல்வத்தைத் தந்தருளுக என்று பிரார்த்தித்தோர் அதனை அடைவர். படிப்பைத் தந்தருளுக என்று பிரார்த்தித்தோர் அதனைப் பெறுவர். நன்மனைவிப்பேற்றை விரும்பினோர் அதனைப் பெறுவர்; மேலும், அந்தமிலின்பத்து அழிவில் வீட்டையடைய விரும்பினோர் அதனைப்பெறுவர். இவை புராதன சரித்திரங்களால் அறியத்தக்கவாம் காமிகாகமத்தில் காமியபோகவிதிபடலம் என்றொரு படலமுண்டு. மந்திரங்கள் அநேகமுண்டென்றும், மந்திரங்களினுலே காமியசித்தி உண்டாகுமென்றும் அம்மந்திரங்களெல்லாம் இஷ்டபலனைக் கொடுக்குமென்றும் அப்படல ஆரம்பத்திலே சொல்லப்பட்டும், பின அநேக மந்திரங்கள் கூறப்பட்டுமிருக்கின்றன. மேலும், காமிகாகமத்திலே காம்யலிங்கப் பிரதிஷ்டா விதிபடலமென ஒரு படலமிருக்கிறது. காமியங்கள் சித்திகளென்று சொல்லப்படுமென்றும், சித்திகள் அநேகமாக உண்டென்றும், அவை அதமசித்தி, மத்திமசித்தி, சியேட்ட சித்தி சிரேஷ்ட சித்தியென நால்வகைப்படுமென்றும, அவையொவ்வொன்றும் உத்தமம் மத்திமம அதமமென மூன்று பேதமாகுமென்றும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் சிவலிங்கத்தை ஆதரியாதவருக்குச் சித்தியும் முத்தியும் இல்லை என்று கூறிப் பின்னர் இலிங்கபேதங்களும் பிரதிஷ்டா பலனும் சொல்லப்பட்டிருக்கிறது, "வாயானை மனத்தானை மனத்துணின்ற கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான்றன்னை" என்று தமிழ் மறையுங் கூறும். இதுபற்றியே "சங்கத்தமிழ் மூன்றுந் தா" என்று ஒளவையார் வேண்டிப் பெற்றனர். —வரும்

## மண்டலாபிஷேக நாட்கணக்கு

(பிரம்ம ஸ்ரீ. ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள்)

ஏகபட்சம் துவிபட்சஞ்ச திரிபட்சஞ்சாபிஷேசயேதிசாந்தி ஓமஹ்ஹோதெ நிதியம் உபசாரசமந்விதம்.

என்னும் பிரமாணபபடி திரிபட்சமாகிய ஒரு மண்டல மென்ப்படும் நாற்பத்தைந்தாநாளே உத்தமோத்தமம். அரை மண்டலமாகிய முப்பதாநாள் மத்திமம், கால்மண்டலமாகிய பதினைந்தாநாள் அதமமாம். ஒரு மண்டலம் என்பதற்கு வாசஸ்பத்தியத்தில் (45) என்றிருக்கிறது. "லெக்சிக்கன்" என்ற அகராதியிலும் 45 நாளென் றிருக்கிறது. ரட்சா யந்திரபூசை 45 நாள்வரையும் செய்யவேண்டுமெனப் பழைய எட்டுப் பிரதிகளிலும் இருக்கிறது. சௌந்தரிய லகரியில் தேவியை உபாசிக்கிறவர்கள் 45 நாள் வரையில் உபாசித்தல் வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பிரமாணங்களெல்லா மிருக்கும்போது சிலர் ஒருமண்டலம் நாற்பது நாளெனக் கணக்கிட்டுச் செய்வதுமல்லாமல் மற்றவர்களுக்கும் உபதேசிக்கின்றார்களே என்செய்வது?

வைத்திய சாத்திரங்களினும் விலையுயர்ந்த தைலவகைகளை வடித்தால் 45 நாள் வரையும் தானியபுடமிருக்கவேண்டுமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. எருவுள் புதைத்துவைக்கும் மருந்துகட்கும் பூமிக்குள் புதைத்து வைக்கும் மருந்துகட்கும் 45 நாள் (ஒருமண்டலம்) வைக்கும்படி சொல்லியிருக்கிறதே இதில் ஓர் வகை மின்சார சக்தி யிருக்கின்ற தென்பதை ஊன்றி நோக்குக.


## பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
இ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to ?2-3-47)

## தந்தரோகசஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்

## சந்தனுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா முதலிய செலவு வேறு.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 211 1-11-46—30-4-47 (வெ)

## NEW IRON SAFES FOR SALE

## புதிய இரும்புப் பெட்டிகள்

விற்பனைக்கு வந்துவிட்டன

யுத்த காலத்திற்குப்பின் இதுவே முதல் இறக்குமதி

வியாபார ஸ்தலங்களுக்கும், வீடுகளுக்கும், அடைவுகடைகளுக்கும் பாவிப்புக்கு ஏற்றஅளவுகளில் குறைந்தவிலையில்திறமான நூதனபூட்டுக்கள்அமைக்கப்பெற்ற இரும்புப்பெட்டிகள் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன. தங்களுக்குத் தேவையான பெட்டிகளை கீழ்க் காணும் விலாசத்தில் நேரில் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.

ஸ்ரீ பத்மநாத ஸ்ரோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.

Tele {Phone 68 / grams SIRIRANGAN}

S. S. PONNUDURAI
Siri. Pathmanatha Store
105. K. K. S. ROAD
Grand Bazaar JAFFNA.

Mis 270 13-12-46—12-3-47

## India Super Tyres and Tubes

## இந்தியா சுப்பர் ரையர் & ரியூப்

கார் லொறி சைஸ்கள்

ரையர் கட்டுப்பாடு நவம்பர் மாசம்
21-ந்உ யுடன் முடிவடைந்து விட்டது.

எங்களிடம் சொற்பதொகையே இருப்பதால் தேவையானதற்கு இப்பொழுதே உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

C. S. Nadarajah Chetty,
41, K. K. S. Road, JAFFNA.

Mis 257 3-12—28-2-47


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday, January, 24, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org